Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 159 | உள்ளூர் - 08.06.2026 | திங்கள் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 159 | வெளியூர் - 09.06.2026 | செவ்வாய் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**சேமிப்பில் சூப்பர் 4 ராசிகள்!**

**BSNL–ல் 100 பணியிடங்கள் அறிவிப்பு!**

**டெட் தேர்வு தேவையில்லை.. ஆசிரியர்களுக்கு ...!**

**திருச்சி கிழக்கு தேர்தல்: ராகவா லாரன்ஸ் சஸ்பென்ஸ்..!**

## முதல்வர் விஜய் ஜூன் 10-ல் டில்லி பயணம்!




சென்னை, ஜூன். 08–

வரும், 11ம்தேதி டில்லியில் பிரதமர் மோடி தலைமையில் நடக்கும், 'நிடி ஆயோக்' கூட்டத்தில் முதல்வர் விஜய் பங்கேற்க உள்ளார்.

இதற்காக, 10ம் தேதி டில்லி செல்கிறார். அங்கு மத்திய பா.ஜ., அரசுக்கு நெருக்கமான நபர்களை சந்தித்து, தமிழகத்தின் தேவைகளுக்கு நிதி பெறுவது குறித்து பேச்சு நடத்த உள்ளார். ஜனாதிபதி திரவுபதி முர்மு, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரையும் சந்திக்க, விஜய் தரப்பில் நேரம் கேட்கப்பட்டுள்ளது.

முதல்வரின் முதல் பயணத்தின் போது, அவருடன் அவரது உதவியாளர், அரசியல் ஆலோசகர், சிகை அலங்கார நிபுணர்கள் மட்டுமே தனி விமானத்தில் சென்றனர். இது விமர்சனங்களை ஏற்படுத்தியது. எனவே, இம்முறை அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளும், முதல்வருடன் தனி விமானத்தில் பயணம் செய்ய இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

## மதுபான உற்பத்தி கட்டணத்துடன் இனி ஒரு கேஸ்க்கு ரூ.90..!



சென்னை, ஜூன். 08–

தமிழக அரசு மதுபான கடைகளில் ஏற்கனவே வசூலிக்கப்படும் மதுபான உற்பத்தி கட்டணத்துடன் இனி ஒரு கேஸ்க்கு ரூ.90 தமிழ்நாடு அரசுக்கு உற்பத்தியாளர்கள் செலுத்த வேண்டும் என அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.




இந்தியா கூட்டணி கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. இதில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, சோனியா, ராகுல், மம்தா பானர்ஜி, அகிலேஷ் யாதவ், மெஹபூபா புப்தி, தேஜஸ்வி யாதவ், சுப்ரியா சூலே உள்ளிட்டோர் பங்கேற்றனர். தி.மு.க., ஆம் ஆத்மி கூட்டணி இதில் கலந்து கொள்ளவில்லை.

## சிங்கப்பெண் அதிரடிப்படை ஜூன். 9-ல் துவக்கம்!




சென்னை, ஜூன். 08–

குழந்தைகள், பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்க சிங்கப்பெண் அதிரடிப்படையை (ஜூன் 09) மாலை 5 மணிக்கு முதல்வர் விஜய் துவக்கி வைக்கிறார்.

மகளிர், சிறுமியர் பாதுகாப்புக்காக, காவல் துறையில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை என்ற புதிய பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. முதல்வர் விஜய் நேரடி கட்டுப்பாட்டில் இயங்கும் இப்படைக்கு, ஐ.ஜி.,யாக பவானீஸ்வரி நியமிக்கப்பட்டு உள்ளார்.

இதை தொடர்ந்து, நவீன், திவ்யதங்கம் ஆகிய இரண்டு எஸ்.ஐ.,க்கள் உட்பட, 18 போலீசார் நியமிக்கப் பட்டுள்ளனர். இவர்கள், பஸ் நிறுத்தங்கள், ரயில் நிலையங்கள், கல்வி நிறுவனங்கள், வணிக வளாகங்கள், தகவல் தொழிநுட்ப பூங்காக்கள் என, மக்கள் அதிகம் கூடும் இடங்களில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட உள்ளனர்.

குழந்தைகள், பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்க சிங்கப்பெண் அதிரடிப்படையை சென்னை, ராஜரத்தினம் மைதானத்தில் நாளை (ஜூன் 09) மாலை 5 மணிக்கு முதல்வர் விஜய் துவக்கி வைக்கிறார். இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முழுவீச்சில் நடந்து வருகிறது.

## ராகுலை விமர்சித்து டெல்லியில் உதயநிதி படத்துடன் பேனர்!




புதுடெல்லி, ஜூன். 08–

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் இந்தியா கூட்டணியின் ஆலோசனை இன்று நடைபெறுகிறது.. டெல்லியில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் 2029 மக்களவை தேர்தலை கருத்தில் கொண்டு, அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது..

நீட் வினாத்தாள் கசிவு, எரிபொருள் விலை உயர்வு போன்ற தேசிய பிரச்சனைகளில் மத்திய பாஜக அரசுக்கு நெருக்கடியை உருவாக்குவது உள்ளிட்ட யூகங்கள் குறித்தும் ஆலோசிக்க எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

இந்த கூட்டத்தில் 23 கட்சிகள் பங்கேற்க உள்ளதாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.. ஆம் ஆத்மி கட்சியும் இந்த கூட்டத்தை புறக்கணிக்க உள்ளதாக தெரிவித்துள்ளது..

இதனிடையே இந்த ஆலோசனை கூட்டத்தை புறக்கணிப்பதாக திமுக அறிவித்துள்ளது.. எனினும் கூட்டணியில் உள்ள மற்ற கட்சிகள் முன்வைக்கும் நாட்டு நலன்களை பாதிக்கும் பிரச்சனைகளுக்கு குரல் கொடுப்போம் என தெளிவுப்படுத்தி உள்ளனர்..

இந்தியா கூட்டணியின் ஆலோசனை கூட்டம் இன்று நடைபெற உள்ள நிலையில் டெல்லியில் ராகுலை விமர்சித்து பேனர்கள் வைக்கப்பட்டுள்ளன.. காங்கிரஸ் கட்சி மற்றும் ராகுல்காந்தியை கடுமையாக விமர்சித்து இந்தியில் பேனர்கள் வைக்கப்பட்டுள்ளனர்.. காங்கிரஸ், ராகுலுக்கு எதிரான கூட்டணி கட்சிகள் கடந்த காலங்களில் சொன்ன விஷயங்கள் பேனர்கள் வைக்கப்பட்டுள்ளன..

திமுக கூட்டணியை காங்கிரஸ் முறித்துக் கொண்ட நிலையில் உதயநிதி படத்துடன் பேனர்கள் வைக்கப்பட்டு உள்ளன.. 20 ஆண்டுகளாக கூட்டணியில் இருந்து முதுகில் குத்திவிட்டு சென்றதாக உதயநிதி கூறியது போன்ற வாசகம் பேனரில் இடம்பெற்றுள்ளது.. இந்தியா கூட்டணி தலைவர்கள் ஒருவருக்கொருவர் எதிரான மனநிலையை கொண்டவர்கள் என பேனரில் விமர்சனம் செய்துள்ளனர்.. உதயநிதி, மம்தா, பினராயி, கெஜ்ரிவால் உள்ளிட்டோரின் ராகுல் குறித்த விமர்சனங்கள் பேனராக வைக்கப்பட்டுள்ளன..

# மீண்டும் போர்..!

# இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல்! போர்நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பிறகு

## முதல் முறையாக பதற்றம்!!



வாஷிங்டன், ஜூன். 08–

மேற்கு ஆசியாவில் பல நாட்களாக நிலவி வந்த அமைதி மீண்டும் சீர் குலைந்துள்ளது.. லெபனான் தலைநகர் பெய்ரூட் மீது இஸ்ரேலியப் படைகள் தாக்குதல் நடத்திய சில மணி நேரங்களிலேயே, ஈரான் பதிலடி கொடுத்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இரவு, ஈரான் இஸ்ரேலியப் பகுதிக்குள் ஏராளமான பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவியது. ஏப்ரல் 8 அன்று இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பிறகு, இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய முதல் நேரடித் தாக்குதல் இதுவாகும். இந்த நிகழ்வு, வடக்கு இஸ்ரேல் முழுவதும் போர் எச்சரிக்கை ஒலிகளை எழுப்பக் காரணமாக அமைந்தது.

ஈரானின் கோபத்திற்கு முக்கியக் காரணம், ஹிஸ்புல்லாவின் வலுவான கட்டுப்பாட்டில் உள்ள பெய்ரூட்டின் தெற்கு புறநகர்ப் பகுதியான தஹியா மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்களே ஆகும். லெபனான் தலைநகர் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால், தாங்கள் அமைதியாக இருக்கப் போவதில்லை என்று தெஹ்ரான் முன்னரே எச்சரித்திருந்தது. இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து, அமெரிக்காவுடனான மறைமுகப் பேச்சுவார்த்தைகளையும் ஈரான் நிறுத்தி வைத்துள்ளது. அந்த நேரத்தில், டொனால்ட் டிரம்ப் தலையிட்டு, இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையே ஒரு தற்காலிகப் போர் நிறுத்தத்தை அறிவித்தார், ஆனால் இரு தரப்பிலும் பரஸ்பரத் தாக்குதல்கள் காரணமாக அந்த ஒப்பந்தம் முறிந்தது. சமீபத்தில், இஸ்ரேல் பெய்ரூட் புறநகர்ப் பகுதிகளைத் தாக்கியதைத் தொடர்ந்து, ஈரான் தனது சிவப்பு கோடுகளைத் தாண்டி விட்டதாக அறிவித்தது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, ஈரானிய புரட்சிகர காவலர்கள் ஒரு அதிகாரப்பூர்வ அறிக்கையை வெளியிட்டனர்.

இஸ்ரேலின் முக்கிய ரமத் டேவிட் விமானத் தளத்தைக் குறிவைத்து இந்த பாலிஸ்டிக் ஏவுகணைகள் ஏவப்பட்டதாக அவர்கள் தெளிவுபடுத்தினர். ஈரானிய தாக்குதல்களைக் கண்டறிந்த உடனேயே, இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் தங்களின் வான் பாதுகாப்பு அமைப்புகளைச் செயல்படுத்தின. எதிரியால் ஏவப்பட்ட அனைத்து ஏவுகணைகளையும் தனது விமானப்படை வெற்றிகரமாக இடைமறித்ததாக இஸ்ரேலிய இராணுவம் அறிவித்தது. இந்தத் தாக்குதல்களின் விளைவாக இதுவரை எந்த உயிரிழப்புகளோ அல்லது சொத்து சேதங்களோ ஏற்படவில்லை என்று இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் (IDF) IDF X தளத்தில் வெளிப்படுத்தின.

**கடுமையான எச்சரிக்கை;**

ஈரானின் கதம் அல்–அன்பியா படைகளின் தளபதி, இஸ்ரேலுக்கும் அதன் ஆதரவாளர்களுக்கும் கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார். "பெய்ரூட்டின் புறநகர்ப் பகுதிகளில் இஸ்ரேலின் கொடூரமான தாக்குதல்கள் விரிவடைந்தால், ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள் மீது தாக்குதல் நடத்துவோம் என்று நாங்கள் முன்னரே எச்சரித்துள்ளோம். இஸ்ரேலிய இராணுவம் தெற்கு லெபனான் மற்றும் பெய்ரூட் மீதான தனது தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும். ஈரானின் நடவடிக்கைகளுக்குப் பதிலடியாக இஸ்ரேல் தனது தாக்குதல்களை விரிவுபடுத்தினால், இஸ்ரேலிய அரசாங்கமும் அதை ஆதரிக்கும் நாடுகளும் வரும் நாட்களில் மேலும் கொடிய மற்றும் பேரழிவுகரமான தாக்குதல்களை எதிர்கொள்ள நேரிடும்," என்று ஈரானிய தளபதி கூறினார்.

சமீபத்திய ஏவுகணைத் தாக்குதல்கள் மத்திய கிழக்கில் நிலவிய முந்தைய அமைதிச் சூழலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டதாகவும், எந்த நேரத்திலும் ஒரு முழு அளவிலான போர் வெடிக்கக்கூடும் என்றும் சர்வதேச வல்லுநர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதல் மீண்டும் கடுமையான சண்டை மூளும் சாத்தியத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், ஈரானுடனான அமெரிக்க–இஸ்ரேல் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சாத்தியமான ஒப்பந்தத்தை எட்டுவதற்கான மத்தியஸ்த முயற்சிகளையும் சிக்கலாக்கியுள்ளது.




நார்வே செஸ் 2026 தொடரில் முதல் இந்தியராக பட்டத்தை வென்று வரலாற்றுச் சாதனை படைத்த கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தாவிற்கு ஊக்கத்தொகை ரூ.50 லட்சத்திற்கான காசோலை தமிழ்நாடு முதல்–அமைச்சர் விஜய் வழங்கினார்.

## தலையங்கம்

மதுரை மணி
ஞாயிற்றுக்கிழமை 08.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
வைகாசி மாதம் 25-ம் தேதி

# 2030-க்குள் 130 கோடி மக்களின் மீது AI தீவிர தாக்கத்தை ஏற்படுத்தும்!




செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பம் உலகம் முழுவதும் உள்ள அனைத்துத் துறைகளையும் வேகமாக மாற்றி வருகிறது. இருப்பினும், ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம் தனது சமீபத்திய அறிக்கையில், இந்த அற்புதமான தொழில்நுட்பத்திற்குப் பின்னால் மனிதகுலத்திற்கு எதிர்பாராத சுற்றுச்சூழல் அச்சுறுத்தல் ஒன்று ஒளிந்திருப்பதாகக் கூறி அதிர்ச்சியூட்டும் எச்சரிக்கைகளை விடுத்துள்ளது. AI உள்கட்டமைப்பின் விரிவாக்கம் பூமியின் வளங்களில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக 2030–ஆம் ஆண்டிற்குள் நீர் மற்றும் மின்சாரம் தொடர்பான கடுமையான நெருக்கடி ஏற்பட வாய்ப்புள்ளதாக அது கூறுகிறது.

இந்த அறிக்கையின் மிகவும் அதிர்ச்சியூட்டும் அம்சம் என்னவென்றால், இந்த தசாப்தத்தின் (2030) இறுதிக்குள், AI தொடர்பான தரவு மையங்கள் (data centers) மட்டும் பயன்படுத்தும் நீரின் அளவு, சுமார் 130 கோடி (1.3 பில்லியன்) மக்களின் அடிப்படை வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இருக்கும். அதாவது, ஆப்பிரிக்கக் கண்டத்தின் ஒட்டுமொத்த மக்கள் தொகையும் தற்போது குடிக்கும் நீரின் அளவை இந்தத் தரவு மையங்கள் உறிஞ்சிவிடும் என்று அர்த்தம்.

தற்போது தரவு மையங்களின் வளர்ச்சிக்கு AI–யே முக்கிய உந்துசக்தியாக உள்ளது. 2025–ஆம் ஆண்டில், மொத்த தரவு மைய மின் நுகர்வில் AI–யின் பங்கு சுமார் 20 சதவீதமாக இருந்தது. கணிக்கப்பட்டபடி 2030–க்குள் இந்தப் பங்கு 40 சதவீதத்தை எட்டினால், அதன் மின்சாரத் தேவை 378 டெராவாட்–மணிநேரத்தை (TWh) எட்டும். இது சஹாரா–கீழ் ஆப்பிரிக்கப் (sub–Saharan Africa) பகுதியின் ஒட்டுமொத்த மக்கள் தொகையின் 2 ஆண்டுகளுக்கான வீட்டு மின்சாரத் தேவைக்குச் சமமாகும்.

ஆய்வாளர்களின் கூற்றுப்படி, இதுவரை AI–யின் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த அனைத்து விவாதங்களும் கார்பன் வெளியேற்றத்தைச் சுற்றியே அமைந்திருந்தன. ஆனால், அது நுகரும் நீர் பயன்பாட்டின் மீது யாரும் கவனம் செலுத்தவில்லை. தரவு மையங்களில் உள்ள சர்வர்களைக் (servers) குளிர்விக்க பெருமளவிலான நீர் தேவைப்படுகிறது. கூடுதலாக, AI அமைப்புகளை இயக்குவதற்குத் தேவையான மின்சார உற்பத்தி செயல்முறைகள் மூலமாகவும் மறைமுகமாக டன் கணக்கில் நீர் வீணடிக்கப்படுகிறது.

**மின் நுகர்வில் புதிய உச்சம்...**

மின் நுகர்வு கணிசமாக அதிகரிக்கும் என்றும் அந்த அறிக்கை கணிக்கிறது. 2030–க்குள், தரவு மையங்களின் மின்சாரத் தேவை இருமடங்காகி 945 டெராவாட்–மணிநேரத்தை (TWh) எட்டும். இது பாகிஸ்தான், வங்கதேசம் மற்றும் நைஜீரியா (இவற்றின் மொத்த மக்கள் தொகை 65 கோடிக்கும் அதிகம்) ஆகிய நாடுகளின் ஆண்டு மின் நுகர்வை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகமாகும்.

AI–யின் சுற்றுச்சூழல் தாக்கம் மென்பொருளுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. தரவு மையங்கள், சிறப்புச் சில்லுகள் (chips), குளிரூட்டும் சாதனங்கள் மற்றும் அவற்றை ஆதரிக்கும் ஆற்றல் கட்டமைப்புகள் உள்ளிட்ட முழுமையான பௌதீக அமைப்பும் இயற்கை வளங்களை பெருமளவில் குறைத்து வருகிறது.

**தினசரி பயன்பாட்டினால் அதிக சேதம்**

மற்றொரு சுவாரஸ்யமான உண்மை என்னவென்றால், செயற்கை நுண்ணறிவின் சாதாரண, அன்றாடப் பயன்பாடு மின்சாரத் தேவையை 80 முதல் 90 சதவீதம் வரை அதிகரிக்கிறது. நாம் வழக்கமாகக் கேட்கும் உரை அடிப்படையிலான வினவல்களை விட, செயற்கை நுண்ணறிவு மூலம் படங்களையும் காணொளிகளையும் உருவாக்குவதற்கு கணிசமாக அதிக மின்சாரம் தேவைப்படுகிறது என்று ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

இருப்பினும், இந்த அறிக்கை செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியை ஊக்கமிழக்கச் செய்யும் நோக்கம் கொண்டதல்ல. ஐ.நா. அறிக்கையானது, தொழில்நுட்ப நிறுவனங்களும் கொள்கை வகுப்பாளர்களும் நிலையான நடைமுறைகளைக் கடைப்பிடிக்கவும், எதிர்காலப் புத்தாக்க உத்திகளில் சுற்றுச்சூழல் செலவுகளைக் கருத்தில் கொள்ளவும் வலுவாக வலியுறுத்துகிறது.

# பிலிப்பைன்ஸில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்!




தெற்கு பிலிப்பைன்ஸ் நாட்டில் 7.8 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதால், அப்பகுதியைச் சுற்றி சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. மேலும், நிலநடுக்கத்தால் கட்டடங்கள் இடிந்து விழும் காட்சிகளும் இணையத்தில் பரவி வருகின்றன. பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா மற்றும் சர்வதேச கண்காணிப்பு முகமைகளின் அதிகாரிகள் சுனாமி எச்சரிக்கைகளை உடனடியாக விடுத்துள்ளது. ஜப்பானுக்கும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்படக்கூடிய கடலோரப் பகுதிகளில் வசிப்பவர்கள், தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் மேடான பகுதிகளை நோக்கி செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# டெட் தேர்வு தேவையில்லை.. ஆசிரியர்களுக்கு ஹேப்பி நியூஸ்...!

சென்னை, ஜூன். 08–

தமிழக அரசு டெட் தேர்வு தொடர்பாக முக்கியமான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதாவது, உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வு மற்றும் முதுகலை ஆசிரியர் பதவி உயர்வுக்கு டெட் தேவையில்லை என தமிழக அரசு சார்பில் வெளியான அரசிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆசிரியராக பணியாற்ற விரும்புவோருக்கு ஆசிரியர்கள் தகுதித் தேர்வு மிகவும் அவசியமானதாகும். இந்ததேர்வை ஆண்டுதோறும் ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB) நடத்தி வருகிறது. டெட் தேர்வு இரண்டு தாள்களாக நடைபெறும். தொடக்கப்பள்ளியில் 1 முதல் 5 வகுப்பு வரை ஆசிரியர்களாக பணிபுரிய விரும்புபவர்கள் தாள் ஒன்றும், 6 முதல் 8ஆம் வகுப்புகளுக்கு கற்பிக்கும் விரும்புபவ்க்ரள் இரண்டாம் தாளும் நடத்தப்படுகிறது.




இதற்கிடையில், கடந்த ஆண்டு உச்ச நீதிமன்றம் டெட் தேர்வு குறித்து அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதாவது, ஆசிரியர் பணியில் தொடருவதற்கும், பதவி உயர்வு பெறுவதற்கும் ஆசிரியர் தகுதித் தேர்வு கட்டாயம் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இரண்டு ஆண்டுகளில் டெட் தேர்வு எழுதி தேர்ச்சி பெறாதவர்கள் விருப்ப ஓய்வு பெறலாம் எனவும் உச்ச நீதிமன்றம் தெரிவித்தது.

மேலும், பணி ஓய்வு பெற 5 ஆண்டுகள் மட்டுமே மீதமுள்ள ஆசிரியர்கள் டெட் தேர்வில் தேர்ச்சி பெறுவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது. உச்ச நீதிமன்றத்தின் இந்த அறிவிப்பால் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 1.75 லட்சம் ஆசிரியர்கள் இந்த தேர்வில் தேர்ச்சி பெற வேண்டிய கட்டாயம் இருக்கிறது. உச்ச நீதிமன்ற உத்தரவை தொடர்ந்து, ஆசிரியர்களுக்கு சிறப்பு டெட் தேர்வை நடத்த பள்ளிக்கல்வித்துறை திட்டமிட்டுள்ளது. இதில் முதல் கட்ட தேர்வு ஜூலை 4,5ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது.

இந்த நிலையில், தமிழக அரசு அரசிதழில் முக்கியமான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதாவது, தமிழ்நாடு அரசு கல்வி, கல்விசார் பணிகள் தொடர்பாக அரசிதழ் வெளியிட்ட தகவலின்படி, உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவி உயர்வு மற்றும் முதுகலை ஆசிரியர் பதவி உயர்வுக்கு டெட் தேர்வு தேவையில்லை (தேவை என குறிப்பிடவில்லை). ஆனால் PSHM, MSHM & பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்கு டெட் தேர்வு கட்டாயம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், பள்ளிக்கல்வித்துறையில் முதுகலை ஆசிரியர் பதவி உயர்வு வழங்கப்படும் போது 18 சதவீதம் தொடக்க கல்வித்துறையில் தகுதி வாய்ந்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது. இதனால், பதவி உயர்வை எதிர்நோக்கி காத்திருக்கும் ஆசிரியர்களுக்கு தமிழக அரசின் இந்த அறிவிப்பை பெரும் நிம்மதியை கொடுத்துள்ளது.

# மத்திய அரசு ஊழியர்கள் கணக்கில் ரூ.11 லட்சம்..!!

புதுடெல்லி, ஜூன். 08–

மத்திய அரசு ஊழியர்களுக்கு தற்போது 8ஆவது சம்பள கமிஷன் அடிப்படையில் சம்பள உயர்வு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கடந்த ஆண்டு இறுதியில் தான் மத்திய அரசு 8ஆவது சம்பள கமிஷனையே அமைத்தது. 8ஆவது சம்பள கமிஷன் அனைத்து துறை அமைச்சகங்கள், மாநில அரசுகளிடம் தீவிர ஆலோசனை நடத்தியது. பல்வேறு அரசு ஊழியர் சங்கங்களின் கோரிக்கைகளையும் பெற்று பரிசீலனை செய்து வருகிறது.




8ஆவது சம்பள கமிஷன் பரிந்துரை வழங்கிய பின் 2028 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து தான் புதிய சம்பளம் வருவதற்கான வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய சூழலில் இந்த இரண்டு ஆண்டு காலம் மத்திய அரசு ஊழியர்களுக்கு பழைய சம்பளமும் வழக்கம் போல ஆண்டுக்கு இரண்டு முறை அகவிலை படியும் உயர்த்தி வழங்கப்படும். சம்பள கமிஷன் தாமதம் ஆனதால் தங்களின் சம்பள உயர்வும் தாமதம் ஆகிறதே அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள் கவலைப்பட தேவையில்லை. ஏனெனில் தவறி போன இந்த இரண்டு ஆண்டுகளுக்கான சம்பளத் தொகையை மத்திய அரசு அரியர் தொகையாக கணக்கிட்டு அரசு ஊழியர்களுக்கு வழங்கிவிடும். எத்தனை மாதங்கள் தாமதம் ஆகிறதோ அத்தனை மாதத்திற்குமான வழங்க வேண்டிய கூடுதல் சம்பளம் கணக்கீடு செய்யப்பட்டு முறையாக ஊழியர்களுக்கு அரியர் தொகையாக வழங்கிவிடுவார்கள். அப்படி பார்க்கும்போது அரசு ஊழியர்களுக்கு எவ்வளவு பணம் அரியர் தொகையாக கிடைக்கப் போகிறது என்பதை தற்போது நாம் தெரிந்து கொள்ளலாம்.


சம்பள கமிஷன் ஃபிட்மண்ட் ஃபேக்டரை அடிப்படையாகக் கொண்டுதான் அரசு ஊழியர்களுக்கான சம்பளத்தை உயர்த்துவதற்கான கணக்கிட்டையே மேற்கொள்கிறது. 7ஆவது சம்பள கமிஷன் 2.57 என்ற ஃபிட்மண்ட் ஃபேக்டரை அடிப்படையாக கொண்டு சம்பள உயர்வு வழங்கியது. இந்த முறை 3.68 என்ற ஃபிட்மன்ட் ஃபேக்டரை கொண்டு சம்பள உயர்வு வழங்க வேண்டும் என அரசு ஊழியர்கள் தரப்பில் கோரிக்கை முன் வைக்கப்படுகிறது.

சம்பள கமிஷனும் மத்திய அரசும் இதனை ஏற்று கொண்டு ஃபிட்மண்ட் ஃபேக்டரை 3.68 என கணக்கீடு செய்தால் சம்பளம் தற்போது இருப்பதை விட மூன்றரை மடங்காக உயரும் என அர்த்தம். ஒரு அரசு ஊழியரின் குறைந்தபட்ச அடிப்படை சம்பளமாக தற்போது 18,000 ரூபாய் உள்ளது. இத்துடன் அவருக்கு வீட்டு வாடகை அலோவென்ஸ், அகவிலைப்படி ஆகியவை வழங்கப்படுகின்றன. ஃபிட்மண்ட் ஃபேக்டர் 3.68 என்றால் குறைந்தபட்ச அடிப்படை சம்பளம் 66,240 ரூபாயாக உயரும். அப்படி என்றால் கூடுதலாக 48,240 ரூபாய். இதனை தாமதமாகும் 24 மாதங்களுக்கு கணக்கிட்டால் 11,57,760 ரூபாய். அதாவது இந்த நபருக்கு அரியர் தொகையே 11.57 லட்சம் ரூபாய் கிடைக்கும். அடிப்படை சம்பளம் உயர உயர கிடைக்கும் அரியர் தொகையும் உயரும். எனவே சம்பள கமிஷன் தாமதம் ஆனாலும் அரசு ஊழியர்கள் கவலைப்பட தேவையில்லை. அதிலும் வீட்டு வாடகை அலொவென்ஸ் உயர்வோடு சேர்த்து அரியர் தொகை கணக்கிடப்பட்டால் அரியர் தொகை தாறுமாறாக உயரும்.

# தமிழ்நாடு மின்வாரிய ஹார்டு டிஸ்க் திருட்டு வழக்கு: சிபிசிஐடிக்கு மாற்றம்!

சென்னை, ஜூன். 08–

சென்னை அண்ணாசாலையில் உள்ள மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் கம்ப்யூட்டர் பிரிவில் 34 ‘ஹார்டு டிஸ்க்குகள்’ திருட்டு போன சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதில் பெரிய சதி திட்டம் இருப்பதாகவும், முக்கியமான தகவல்களை அழிப்ப தற்காக இந்த ‘ஹார்டு டிஸ்குகள்’ திருடப்பட்டிருக்கலாம் என்றும், இதுதொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்தவேண்டும் என்றும் பல்வேறு கோரிக்கைகளும், குற்றச்சாட்டுகளும் எதிர்க்கட்சிகள் தரப்பில் வைக்கப்பட்டது.




போலீஸ் கமிஷனர் அமல்ராஜ் உத்தரவின்பேரில், சென்னை சிந்தாதிரிப்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். விசாரணையில் மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் கம்ப்யூட்டர்களை மேற்பார்வையிடும் ஊழியராக பணியாற்றி வந்த கோபிநாத் (வயது 31) என்பவர் கைது செய்யப்பட்டார்.

அவர் கம்ப்யூட்டர் ‘ஹார்டு டிஸ்க்குகளை’ திருடி, பெங்களூருவில் உள்ள கம்ப்யூட்டர் நிறுவனம் ஒன்றில் விற்பனை செய்ததாக கண்டறியப்பட்டது. அதன்பேரில் தனிப்படை போலீசார் பெங்களூரு சென்று 34 ‘ஹார்டு டிஸ்க்குகளையும்’ மீட்டனர். கைது செய்யப்பட்ட கோபிநாத், அரகோணம் அருகே உள்ள வளர்புரம் என்ற கிராமத்தை சேர்ந்தவர்.

கடந்த 1 ஆண்டுக்கு முன்புதான் சென்னை மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் கம்ப்யூட்டர் மேற்பார்வையாளராக பணியில் சேர்ந்ததாக கூறப்படுகிறது. அவரை சென்னை எழும்பூர் கோர்ட்டில் போலீசார் ஆஜர்படுத்தினார்கள். வரும் 19–ந்தேதி வரை அவரை நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்க கோர்ட்டு உத்தரவிட்டது. அதன்பேரில் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். அவரை மீண்டும் காவலில் எடுத்து விசாரணை நடத்த போலீசார் திட்டமிட்டுள்ளனர்.

இந்த வழக்கில் ‘ஹார்டு டிஸ்க்குகளை’ வாங்கிய பெங்களூரு கம்ப்யூட்டர் நிறுவன அதிபர் முரளி மனோகர் என்பவரும் நேற்று கைது செய்யப்பட்டார். அவரிடம் தீவிர விசாரணை நடப்பதாகவும், விசாரணைக்குப் பிறகு நீதிமன்ற காவலில் அவர் சிறைக்கு அனுப்பப்படுவார் என்றும் போலீசார் கூறினார்கள். இந்த நிலையில், தமிழ்நாடு மின்வாரிய ஹார்டு டிஸ்க் திருட்டு வழக்கு சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சென்னை காவல்துறை, டிஜிபியிடம் பரிந்துரை செய்ததன்பேரில் வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் வழக்கு விசாரணை சூடுபிடித்துள்ளது.

# திருச்சி கிழக்கு தேர்தல்: ராகவா லாரன்ஸ் சஸ்பென்ஸ்..!


சென்னை, ஜூன். 08–

திருச்சி கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட உள்ளதாக பரவி வரும் தகவல்களுக்கு நடிகர் ராகவா லாரன்ஸ் விளக்கமளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளப் பதிவில், ”திருச்சி கிழக்குத் தொகுதியில் நான் தேர்தலில் போட்டியிட விருப்பதாகப் பல்வேறு ஊடகங்களில் செய்திகள் பரவி வருகின்றன. இதுகுறித்த தகவலை அறிய ஊடக நண்பர்கள் பலர் என்னைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, சந்திக்க விருப்பம் தெரிவித்து வருகின்றனர். இந்த ஊகங்கள் அதிகரித்துள்ள நிலையில், இதுகுறித்து விளக்கமளிக்க வேண்டும் என்று கருதி இந்தத் தகவலைப் பகிர்கிறேன்.




தற்போது நான் ’பென்ஸ்’ திரைப்படத்தின் படப்பிடிப்பில் மும்முரமாக பணியாற்றி வருகிறேன். இந்தப் பணிகள் வரும் ஜூன் 10 ஆம் தேதியுடன் நிறைவடைகின்றன. என் தாயாரின் ஆசியுடன், எனது வாழ்க்கை தொடர்பான ஒரு முக்கிய முடிவை வரும் ஜூன் 11–ஆம் தேதி, வியாழக்கிழமை காலை 9:30 மணிக்கு அறிவிக்கவுள்ளேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.



# சேமிப்பில் சூப்பர் 4 ராசிகள்!




பணம் சம்பாதிப்பது எவ்வளவு முக்கியமோ, அதே அளவு முக்கியம் சம்பாதித்த பணத்தைச் சரியாகச் சேமிப்பதும் ஆகும். ஜோதிடத்தின்படி, சில ராசிக்காரர்கள் குறைந்த வருமானம் இருந்தாலும் எதிர்காலத்திற்காகப் பணத்தைச் சிறப்பாகச் சேமிக்கிறார்கள். அவர்கள் எந்தெந்த ராசிக்காரர்கள் என்று இங்கே பார்ப்போம்.

எல்லோரும் பணம் சம்பாதிக்க விரும்புகிறார்கள். ஆனால், சம்பாதித்த பணத்தைச் சரியாக நிர்வகிப்பது, தேவையான இடங்களில் மட்டும் செலவு செய்வது மற்றும் எதிர்காலத்திற்காகச் சேமிப்பது என்பது எல்லோராலும் முடிவதில்லை. ஜோதிடத்தின்படி, சில ராசிக்காரர்கள் பண விஷயத்தில் மிகவும் கவனமாக இருப்பார்கள். அவர்கள் தேவையற்ற செலவுகளைத் தவிர்த்து, எதிர்காலப் பாதுகாப்பிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறார்கள். அந்த ராசிகள் எவை என்று பார்ப்போம்.

**ரிஷபம்**

ரிஷப ராசிக்காரர்களும் பணத்தின் மதிப்பை நன்கு உணர்ந்தவர்கள். சுக்கிரன் இந்த ராசியை ஆளுகிறார் என்றாலும், இவர்கள் மிகவும் நிலையான குணம் கொண்டவர்கள். வாழ்க்கையில் வசதிகளை விரும்பினாலும், அதற்கென ஒரு நிதித் திட்டத்தைப் பின்பற்றுகிறார்கள். தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை எதிர்காலத்திற்காகச் சேமிக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள். ஒருமுறை முதலீடு செய்யவோ அல்லது சேமிக்கவோ தொடங்கிவிட்டால், அதைத் தொடர்ந்து முறையாகச் செய்கிறார்கள்.

**கடகம்**

கடக ராசிக்காரர்கள் குடும்பத்தின் மீது அதிக அக்கறை கொண்டவர்கள். தங்கள் குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் எதிர்கால நலனுக்காகப் பணத்தைச் சேமிப்பது இவர்களின் இயல்பான குணம். எதிர்பாராத சூழ்நிலைகள் எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்பதை இவர்கள் அதிகம் சிந்திப்பார்கள். குடும்ப தேவைகள், குழந்தைகளின் எதிர்காலம் மற்றும் மருத்துவச் செலவுகள் போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு சேமிப்பதில் இவர்கள் சிறந்து விளங்குகிறார்கள்.

**கன்னி**

கன்னி ராசிக்காரர்கள் பணத்தைச் சேமிப்பதில் மிகவும் கவனமாக இருப்பார்கள். புதன் கிரகம் இந்த ராசியை ஆளுகிறது. இவர்கள் கணக்கீடுகளின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கிறார்கள். செலவு செய்வதற்கு முன், அது அவசியமா இல்லையா என்பதை யோசிப்பார்கள். எதிர்காலச் சூழல்களை முன்கூட்டியே கணித்து, நிதிப் பாதுகாப்பிற்காகப் பணத்தைச் சேமிக்க முயல்கிறார்கள்.

**மகரம்**

மகர ராசிக்காரர்கள் ஒழுக்கத்தின் அடையாளமாகத் திகழ்கிறார்கள். சனி கிரகத்தின் ஆதிக்கம் அதிகம் கொண்ட இவர்கள், வாழ்க்கையை மிகுந்த பொறுப்புணர்வுடன் அணுகுகிறார்கள். தங்கள் வருமானம் தற்போதைய தேவைகளுக்கு மட்டுமல்லாமல், எதிர்கால இலக்குகளுக்கும் பயன்பட வேண்டும் என்று நம்புகிறார்கள். வீடு கட்டுதல், குழந்தைகளின் கல்வி மற்றும் ஓய்வுக்காலம் போன்ற நீண்ட கால இலக்குகளுக்கு இவர்கள் முன்கூட்டியே திட்டமிடுகிறார்கள். தாங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாயும் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

## சினிமா துளிகள்..!

# சிம்புவின் 51-வது படத்துக்கு இயக்குநர் ரெடி!



சிம்புவின் 51–வது படம் குறித்து தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி சமீபத்தில் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:–

சிம்புவின் 51–வது படத்திற்காக நாங்கள் தயாராக இருக்கிறோம். சிம்புவும் தயாராக இருக்கிறார். மேலும் அஸ்வத் மாரிமுத்துவின் திரைக்கதையும் தயாராகிவிட்டது. ஆனால் படங்களின் வரிசை மாறக்கூடும். பிப்ரவரி 2027–க்குள் படப்பிடிப்பைத் தொடங்க விரும்புகிறோம். இருப்பினும் இது அஸ்வத்தின் பிற பட வேலைகள் மற்றும் சிம்பு தனது தற்போதைய பணிகளை முடிப்பதை பொறுத்தே அமையும் என்று கூறியுள்ளார்.

இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து தற்போது நடிகர் ரஜினிகாந்தின் ‘தலைவர் 173’ படத்தை இயக்க உள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத தொடக்கத்தில் தொடங்கும் என கூறப்படுகிறது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## நல்ல தூக்கத்தின் ரகசியம் என்ன?



மனித உடலில் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தைப் பராமரிக்கும் தொடர்ச்சியான செயல்பாட்டில் தூக்கம் முக்கியப் பங்கு வகிக்கிறது. பொதுவாக, ஆரோக்கியமாக இருக்க ஒரு நாளைக்கு 7 முதல் 8 மணிநேரத் தூக்கம் போதுமானது என்று அனைவரும் கருதுகின்றனர். இருப்பினும், தேவைப்படும் தூக்கத்தின் அளவு அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஒவ்வொருவருக்கும் தேவைப்படும் தூக்கத்தின் அளவு அவர்களின் வயதைப் பொறுத்து மாறுபடுகிறது. நீண்ட நேரம் தூங்குவது மட்டுமல்லாமல், தூக்கத்தின் தரமும் முக்கியம் என்று நிபுணர்கள் தெளிவுபடுத்துகின்றனர்.

தூக்கத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் இடையிலான தொடர்பு: தூக்கம் நல்ல ஆரோக்கியத்துடன் நேரடியாக தொடர்புடையது. தூக்கத்தின் தரம் மோசமாக இருக்கும்போது, போதுமான மணிநேரம் தூங்கினாலும், காலையில் எழுந்திருக்கும்போது உடல் சோர்வாக உணரக்கூடும். அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் (CDC) அறிக்கைகளின்படி, நாள்பட்ட தூக்கமின்மையால் (chronic insomnia) பாதிக்கப்பட்டவர்களுக்கு நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், தீவிர இதய நோய், உடல் பருமன், மன உளைச்சல் அல்லது மனச்சோர்வு போன்ற உயிருக்கு ஆபத்தான பல்வேறு பாதிப்புகள் ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது. அதனால்தான் ஒவ்வொருவரும் தங்கள் வயதிற்கு ஏற்ப தினமும் போதுமான அளவு தூங்க வேண்டும்.

சிறு குழந்தைகளுக்குத் தேவைப்படும் தூக்கம்: குழந்தைகள் வளரும் பருவத்தில் அவர்களின் உடல் மற்றும் மூளை வளர்ச்சிக்கு அதிக தூக்கம் தேவைப்படுகிறது. CDC வழிகாட்டுதல்களின்படி, வெவ்வேறு வயதுடைய குழந்தைகளுக்குத் தேவைப்படும் தூக்கத்தின் விவரங்கள் பின்வருமாறு:

பிறந்த குழந்தைகள் (0 முதல் 3 மாதங்கள்): ஒரு நாளைக்கு 14 முதல் 17 மணிநேரம்

4 முதல் 12 மாத வயதுடைய குழந்தைகள்: ஒரு நாளைக்கு 12 முதல் 16 மணிநேரம்

1 முதல் 2 வயதுடைய குழந்தைகள்: ஒரு நாளைக்கு 11 முதல் 14 மணிநேரம்

3 முதல் 5 வயதுடைய குழந்தைகள்: ஒரு நாளைக்கு 10 முதல் 13 மணிநேரம்

9 முதல் 12 வயதுடைய குழந்தைகள்: ஒரு நாளைக்கு 9 முதல் 12 மணிநேரம்

13 முதல் 18 வயதுடைய பதின்ம வயதினர்: ஒரு நாளைக்கு 8 முதல் 10 மணிநேரம்

பெரியவர்கள் மற்றும் முதியவர்களுக்குத் தேவைப்படும் தூக்கம்: குழந்தைகள் வளரும்போது, உடலுக்குத் தேவைப்படும் தூக்கத்தின் அளவு படிப்படியாகக் குறைகிறது. பெரியவர்கள் மற்றும் முதியவர்கள் ஒரு நாளைக்கு எத்தனை மணிநேரம் தூங்க வேண்டும் என்பதை CDC தெளிவாகக் குறிப்பிடுகிறது.

18 முதல் 60 வயது வரையிலான பெரியவர்கள்: ஒரு நாளைக்கு குறைந்தது 7 மணிநேரம்

61 முதல் 64 வயது வரையிலான நடுத்தர வயதுடையவர்கள்: ஒரு நாளைக்கு 7 முதல் 9 மணிநேரம் வரை

65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட முதியவர்கள்: ஒரு நாளைக்கு குறைந்தது 7 முதல் 8 மணிநேரம் வரை

முதியவர்கள் தங்கள் ஹார்மோன் சமநிலை பாதிக்கப்படாமலும், அன்றாடப் பணிகளைச் சுறுசுறுப்பாகச் செய்யவும், இக்காலகட்டத்தில் நிம்மதியான உறக்கத்தைப் பெறுவது அவசியமாகும்.

தரமான உறக்கத்திற்கான குறிப்புகள்: சரியான நேரத்தில் படுக்கைக்குச் செல்வதோடு மட்டுமல்லாமல், நிம்மதியான உறக்கத்தைப் பெற சில வாழ்க்கை முறை மாற்றங்களையும் செய்துகொள்வது நல்லது. தினமும் படுக்கைக்குச் செல்லும் நேரத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம், காலையில் எழுந்திருக்கும் நேரத்தையும் சீராக வைத்திருக்க முடியும்.

படுக்கைக்குச் செல்வதற்கு குறைந்தது ஒரு மணி நேரத்திற்கு முன்பிருந்தே மொபைல் போன், மடிக்கணினி மற்றும் தொலைக்காட்சி போன்ற மின்னணுத் திரைகளைப் பார்ப்பதை முழுமையாகத் தவிர்க்க வேண்டும். இரவு நேரங்களில் காபி மற்றும் தேநீர் போன்ற காஃபின் (caffeine) கலந்த பானங்களை அருந்துவதைத் தவிர்க்கவும். படுக்கையறை அமைதியாகவும், சத்தமின்றியும், குறைந்த வெளிச்சத்துடனும் இருப்பதை உறுதி செய்வது உறக்கத்தின் தரத்தை வெகுவாக மேம்படுத்தும்.



தேனி மாவட்ட ஆட்சியர் வைத்திநாதன், மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் அமைச்சர் ஆர்.நிர்மல்குமாரை மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து பூங்கொத்து மற்றும் புஸ்தகம் வழங்கினார்.

# ஆசிரியர்கள் சங்க மாவட்ட பொதுக்குழுவில் தீர்மானம்!



நாமக்கல், ஜூன். 08–

தமிழ்நாடு உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்ட பொதுக்குழு கூட்டம், பணி நிறைவு பெறும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா, நாமக்கல்லில் நடந்தது. மாவட்ட தலைவர் அருள்செல்வன் தலைமை வகித்தார். தலைமையிடத்து செயலாளர் சண்முகம் வரவேற்றார். மாவட்ட மகளிரணி செயலாளர்கள் வாசுகி, மாலதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில துணை பொதுச்செயலாளர் மாயகிருஷ்ணன், சட்ட செயலாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் கோரிக்கை குறித்து விளக்கி பேசினர். கூட்டத்தில், கடந்த ஆட்சியில் வெளியிட்டுள்ள அரசு உத்தவரால், தமிழக உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டமானது, ஆசிரியர்கள், அரசு ஊழியர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகையை கொண்டு வழங்குவதாக உள்ளது. 2025–26 கல்வி ஆண்டில் பணி நிறைவு பெற்ற ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் தங்களுடைய ஓய்வூதிய பலன்களை பெற முடியாமல் தவிக்கின்றனர். அவற்றை கருத்தில் கொண்டு, பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஆசிரியர் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற அனைத்து பிரிவினரும், 40 சதவீதம் மதிப்பெண் பெற வேண்டும் என அரசு உத்தரவை திருத்தம் செய்து வெளியிட வேண்டும். ஆசிரியர் தகுதி தேர்வில் பெறும் மதிப்பெண்ணுடன், அவர்கள் பணியாற்றியுள்ள பணிக்காலத்திற்கு ஏற்ப, வெய்ட்டேஜ் மதிப்பெண் இரண்டு ஆண்டு பணி காலத்திற்கு, ஒரு மதிப்பெண் என்ற அடிப்படையில் வழங்க வேண்டும்.

பள்ளிக்கல்வித்துறையில், அனைத்து நிலையிலும் ஒளிவு மறைவற்ற ஆசிரியர்கள் பதவி உயர்வு, பணி மாறுதல் கலந்தாய்வை உடனடியாக நடத்த வேண்டும். பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள், அலுவலக பணியாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்.

வரும் கல்வி ஆண்டுகளில் நடைமுறைக்குவரும் புதிய பாடத்திட்டத்தில், 8 முதல், 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு, அனைத்து பாடங்களுக்கும், 10 மதிப்பெண் அகமதிப்பெண் வழங்க வேண்டும். அரசு பள்ளி மாணவர்களுக்கு, உயர்கல்வி நிறுவனங்களில், 7.5 சதவீதம் இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை, 10 சதவீதமாக உயர்த்த வேண்டும்.

ஆர்டிஇ சட்டத்தின் படி தனியார் பள்ளிகளில் 25 சதவீதம் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு ஒதுக்க வேண்டும் என்பதை மாற்றி அரசு பள்ளிகளில் அந்த மாணவர்களுக்கு சேர்க்கை வழங்க வேண்டும் என்பவை உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து, பணி நிறைவு பெறும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பொன்னாடை அணிவித்து, நினைவு பரிசு வழங்கி கவுரவிக்கப்பட்டனர்.

# கீழக்கரையில் கந்தூரி விழா

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை சாலைத்தெருவில் அமைந்துள்ள “18 வாலிபர்கள் ஷஹீத் ஒலியுல்லாஹ் தர்ஹா”வில் 852ஆம் ஆண்டு கந்தூரி விழா ஆன்மிகச் சூழலில் சிறப்பாக நடைபெற்றது. தர்ஹா வளாகம் முழுவதும் பக்தர்களின் பெருந்திரளால் நிரம்பி, மௌலிது ஓதுதல், சிறப்பு துஆ பிரார்த்தனை மற்றும் இஸ்லாமிய இன்னிசை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

விழாவின் முக்கிய அம்சமாக நடைபெற்ற டாக்டர் தாஜூதீன் ஃபைஜீ இன்னிசை நிகழ்ச்சி பக்தர்களை பெரிதும் கவர்ந்தது. மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டதுடன், நிறைவாக சுமார் 1000 கிலோ நெய் சோறு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.



MRF Association மற்றும் ஓடைக்கரை பள்ளி ஜமாத் பரிபாலன கமிட்டி இணைந்து விழாவை சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

# மக்கள் சட்ட உரிமைகள் கழகம் ஐம்பெரும் விழா!




ஜோலார்பேட்டை, ஜூன். 08–

மக்கள் சட்ட உரிமைகள் கழகம் ஐம்பெரும் விழா திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அருகே ஜோலார்பேட்டை தனியார் திரு மண மண்டபத்தில் நடைபெற்றது

நிகழ்ச்சில் மாநில ஆட்சி மன்ற குழு உறுப்பினர் வாஜித் தலைமை தலைமையில் நடைபெற்றது நிகழ்ச்சியில் வெங்கடேசன், சாம்பசிவம் , பூங்கொடி, சரவணன், சண்முகம் ,லோகேஷ், சக்திவேல், சந்துரு, திருநாவுக்கரசு , அஸ்லாம், முஸ்தபா , முன்னிலை வகித்தனர்

ஐம்பெரும் விழாவில் புவனேஸ்வரன் பொது செயலாளர் வசந்த், மாநில பொருளாளர் ஹாஜா முகைதீன், குணசேகரன் அனைவரும் வரவேற்புரை ஆற்றினார் மக்கள் சட்ட உரிமைகள் கழகம் ஐபெரும் விழாவில் சிறப்பு விருந்தினராக மாநில நிர்வாக செயலாளர் வெங்கட்,கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

பிறகு விருது வழங்கும் விழா மனித உரிமைகள் விழிப்புணர்வு விழா புதிய நிர்வாகிகள் அடையாள அட்டை வழங்கினார் மற்றும் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது

இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திருப்பதி ராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தாஹிரா திரைப்பட இயக்குனர் நடிகர் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன்

ஜானி ஜானி டி.கே மோகன் மாவட்டத் துணைச் செயலாளர் ராஜேந்திரன் நகர கழக செயலாளர் M9 குழுமத்தின் நிர்வாகிகள் V.வெங்கட் ராமன் சங்கர் CA., A.V.பாலாஜி அம்மாங்கி வரதாச்சாரி CA., ஹாஜி. A.S.யூனுஸ் செல்வி.R.புவேனஸ்வரி திரு. வினோத் தாம்பிரன் CA., மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு அரசு அனைத்து சுகாதார செவிலியர் சங்கம் நாமக்கல் மாவட்ட செவிலியர் சங்க கூட்டம்!




நாமக்கல், ஜூன். 08–

தமிழ்நாடு அரசு அனைத்து சுகாதார செவிலியர் சங்கம் நாமக்கல் மாவட்ட செவிலியர் சங்க கூட்டம் இராசிபுரம் ரோட்டரி மண்டபத்தில் 07.06.2026 அன்று நாமக்கல் மாவட்ட தலைவர் திரும. ராதாமணி SHN அவர்கள் தலைமையில் நடைமெற்றது.

ரோட்டரி ஹால்–ல் 07.06.2026 கூட்டத்தில் மாநில நிறுவனர் அவர்கள் திருமதி R.இந்திரா மற்றும் மாநில இணை செயலாளர் திருமதி அ.வைரம் அவர்கள், முன்னிலையில் நடைபெற்றது.

மாநில இணை நிறுவனர் திருமதி. R. இந்திரா அவர்கள் கோரிக்கை விளக்க உறையற்றினார். தஞ்சாவூர் மாவட்ட தலைவர் திருமதி. அனிதா அவர்கள் சிறப்பு வருந்தினாக கலந்து கொண்டார்.நாமக்கல மாவட்ட அனைத்து வட்டார சுகாதார செவிலியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# வார தொடக்கத்தில் அதிரடியாக குறைந்த தங்கம் விலை!



சென்னை, ஜூன். 08–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,040 குறைந்து ரூ.1,12,560–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.130 குறைந்து ரூ.14,070–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. வெள்ளி விலை ஒரு கிராம் வெள்ளி ரூ.270–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

### நாமக்கல் பழைய பேருந்து நிலையத்திற்குள்

# பேருந்துகள் வந்து செல்லும்; கலெக்டர் தகவல்!

நாமக்கல், ஜூன். 08–

கலெக்டர் மதுபாலன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது; நாமக்கல் மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்தின் வெளிப்பகு தியில், பயணிகள் நின்று பேருந்துகளில் ஏறுவதால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, பொது மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இதை தவிர்க்கும் வகையில், புதிய பேருந்து நிலையத்தில் இருந்து, மெயின் ரோட்டில், பழைய பேருந்து நிலையம் வழியாக, திருச்சி, துறையூர், மோகனூர் மற்றும் சேந்தமங்கலம் பகுதிகளுக்கு செல்லும் புறநகர் பேருந்துகள் அனைத்தும், நாளை 5ம் தேதி முதல், பழைய பேருந்து நிலையத்திற்குள் சென்று, பயணிகளை ஏற்றிக்கொண்டு வெளியே செல்லும்.

எனவே, பழைய பேருந்து நிலையத்தில் இருந்து, திருச்சி, துறையூர், மோகனூர் மற்றும் சேந்தமங்கலம் பகுதிகளுக்கு செல்லும் பயணிகள் அனைவரும் பழைய பேருந்து நிலையத்தின் உட்புறம் இருந்து பேருந்துகளில் ஏறி பயணம் செய்ய வேண்டும்.

மேலும், இரவு நேரங்களில் சென்னை மற்றும் பிற பகுதிகளுக்கு, பார்க் ரோட்டில் நிறுத்தி பயணிகளை ஏற்றி செல்லும் ஆம்னி பேருந்துகள் அனைத்தும் பழைய பேருந்து நிலையத்திற்குள் நிறுத்தி பயணிகளை ஏற்றிச்செல்ல வேண்டும் என கலெக்டர் அறிவித்துள்ளார்.




மருத்துவம், மருத்துவக்கல்வி மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் மரு.கே.ஜி.அருண்ராஜ், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் செ.கமலி ஆகியோர் தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே, திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், சட்டமன்ற உறுப்பினர்கள் (திருப்பூர் தெற்கு) எஸ்.பாலமுருகன், திருப்பூர் வடக்கு வி.சத்யபாமா, (பல்லடம்) ராம்குமார் , (காங்கேயம்)என்.எஸ்.என். நடராஜ் , மாநகராட்சி துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர் .எம்.பி.அமித் , மாவட்ட காவல் கண்காணிப்பாளர், யாதவ் கிரிஷ் அசோக், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட வன அலுவலர் ராஜேஷ், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) க.சங்கமித்திரை உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# வேலை வாய்ப்பு

## இந்திய அரசின் தொலைத்தொடர்பு நிறுவனமான BSNL–ல் 100 பணியிடங்கள் அறிவிப்பு!




நிறுவனத்தின் பெயர்: பிஎஸ்என்எல் பாரத் சஞ்சார் நிகம் லிமிடெட்

அறிவிப்பு எண்: BSNLCO–11/12(11)/1/2026–RECTT–CO

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: 100 இளநிலை தொலைத்தொடர்பு அதிகாரி (தொலைத்தொடர்பு) பணியிடங்கள்

பணியிடங்கள்: இந்தியா முழுவதும்

தொடங்கும் தேதி: 04.06.2026 காலை 10.00 மணி

கடைசி தேதி: 03.07.2026 காலை 10.00 மணி

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://externalexam.bsnl.co.in/

# ஆன்லைன் மூலம் பத்திரங்களை பதிவு செய்துகொள்ளலாம்!

நாமக்கல், ஜூன். 08–

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் மதுபாலன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: பத்திரப்பதிவு அலுவலங்களில், ஆவணப்பதிவு நடைமுறைகளை எளிமைப்படுத்த பொதுமக்கள் தாங்களே நேரடியாக ஆன்லைன் மூலம் ஆவணப்பதிவு முறையினை, தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.




இந்த ஆவணப்பதிவு முறையின் மூலம் பொது மக்கள் சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு நேரில் செல்லாமல், எங்கிருந்தும் எப்போது வேண்டுமானாலும், இரவு பகல் 24 மணி நேரமும், ஆன்லைன் மூலம் பதிவுத்துறை வெப்சைட்டில் தங்களது ஆவணங்களை பதிவு செய்து கொள்ள முடியும். ஆவணப் பதிவிற்கு சார்பதிவாளர் ஒப்புதல் அளித்ததும், சார்பதிவாளரின் எலக்ட்ரானிக் கையொப்பத்துடன், ஆவணம் சம்பந்தப்பட்ட நபரின் செல்போன் மற்றும் இமெயில் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். அந்த ஆவணத்தை சம்மந்தப்பட்டவர்கள் டவுன்லோடு செய்து கொள்ளலாம். வருகை இல்லா ஆவணப்பதிவு (எனி வேர் ரெஜிஸ்ட்ரேசன்) நடைமுறை விரைவில் கட்டாயமாக்கப்பட உத்தேசிக்கப்பட்டு, அதற்கான கீழ்க்கண்ட நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.

சார்பதிவாளர் அலுவலகம் வராமலேயே பதிவு செய்யக்கூடிய ஆவணங்கள்: முதல் விற்பனை மனை (ஃபர்ஸ்ட் சேல் ஆப் பிளாட்), முதல் விற்பனை அடுக்குமாடி குடியிருப்பு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய விற்பனை ஆவணங்கள். வங்கிகளில் பெறும் கடனுக்கான அடமானம் மற்றும் ரசீது ஆவணங்கள்.

பொதுமக்கள், கட்டுமான நிறுவனங்கள், ஆவண எழுத்தர்கள் மற்றும் வங்கிகள், வக்கீல்கள், பதிவுத்துறை வெப்சைட்டில், தங்களுக்கான லாக் இன் ஐடியை தாங்களே உருவாக்கி, ஆவணங்களை (ரசீது) ஆன்லைன் மூலம் அப்லோடு செய்து சமர்ப்பிக்கலாம்.

ஆவணத்தை எழுதிக் கொடுப்பவர்கள், எழுதிப் பெறுபவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகிய அனைவருக்கும் ஆதார் அட்டை அப்லோடு செய்யவேண்டும்.

ஆதார் ஆணையத்தின் மூலம் கைரேகை அல்லது கருவிழி படலம் வழி ஆதார் சரிபார்க்கப்பட வேண்டும்.

தேவையான தொழில் நுட்ப வசதிகள்: இண்டர்நெட் இணைப்பு, யுஐடிஏஐ அங்கீகரிக்கப்பட்ட எல்1 விரல் ரேகை இயந்திரம் மற்றும் கருவிழிப்படலம் எடுக்கும் கருவி. வெப்கேமரா ஆகியவை இருந்தால் போதும்.

சந்தேகங்களுக்கு டிசிஎஸ் நிறுவன அலுவலர்களை ஹார்டுவேர் சம்மந்தமாக 7397574067, 9940446694, சாஃப்ட்வேர் சம்மந்தமாக 6369798973, 8525805957 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# இந்திய ரூபாயின் மதிப்பு ரூ.95.35 ஆக சரிவு!

புதுடெல்லி, ஜூன். 08–
சர்வதேச சந்தையில் நிலவி வரும் பல்வேறு சாதகமற்ற சூழல்களால், இன்று காலை வர்த்தகத் தொடக்கத்தில் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 17 பைசாக்கள் சரிந்து 95.35 ஆகப் பதிவாகியுள்ளது. அமெரிக்காவின் வலுவான பொருளாதாரத் தரவுகள் காரணமாக, உலகளாவிய சந்தையில் டாலரின் மதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவது ரூபாயின் வீழ்ச்சிக்கு



முக்கிய காரணமாக அமைந்துள்ளது. ஈரான், இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதை அடுத்து மத்திய கிழக்கு நாடுகளில் நிலவி வரும் தீவிர அரசியல் பதற்றம் முதலீட்டாளர்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. உலகளாவிய கச்சா எண்ணெய் விலைக் குறியீடான ப்ரெண்ட் கச்சா எண்ணெய் விலை 3.43% உயர்ந்து, ஒரு பேரல் 96.28 டாலராக வர்த்தகமாகி வருகிறது. இந்தியாவின் இறக்குமதி செலவுகள் இதனால் அதிகரிக்கும் என்பதால் இது ரூபாய் மதிப்பை நேரடியாகப் பாதித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அன்று இந்திய ரிசர்வ் வங்கி வெளிநாட்டு மூலதன வரத்து மற்றும் அந்நிய செலாவணி புழக்கத்தை அதிகரிக்க எடுத்த அதிரடி நடவடிக்கைகளால் ரூபாய் மதிப்பு 56 பைசா உயர்ந்து 95.18 ஆக நிறைவடைந்தது. எனினும், வாரத்தின் முதல் நாளான இன்று உலகளாவிய அழுத்தங்கள் காரணமாக மீண்டும் சரிவைச் சந்தித்துள்ளது. ரூபாய் மதிப்பின் இந்த வீழ்ச்சியால் உள்நாட்டு பங்குச்சந்தைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

காலை வர்த்தகத்தில் சென்செக்ஸ் 724 புள்ளிகளும், நிஃப்டி 222 புள்ளிகளும் சரிந்துள்ளன. தற்போதைய சூழலில், அமெரிக்காவின் அடுத்தகட்ட வட்டி விகிதக் கொள்கை மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் அமைதிப் பேச்சு வார்த்தை போன்ற நகர்வுகளைப் பொறுத்தே இனி ரூபாய் மதிப்பின் போக்கு அமையும் என நிதித்துறை வல்லுநர்கள் கணித்துள்ளனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாளில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் பெற்றுக் கொண்டார்.

# யூடியூபர் மாரிதாஸிடம் போலீசார் விசாரணை!



சென்னை, ஜூன். 08–
என்னை கைது செய்ய 10க்கும் மேற்பட்ட காவலர்கள் மதுரையில் உள்ள என் வீட்டுக்கு வந்துள்ளனர். யூடியூபர் மாரிதாஸ் தெரிவித்திருந்த நிலையில் மதுரை வந்த சென்னை சைபர் கிரைம் போலீசார், யூடியூபர் மாரிதாஸை விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.

# ரூ.2,100 கோடி ஈசிஆர் மேம்பாலத் திட்டம்; கைவிட தமிழக அரசு முடிவு!

சென்னை, ஜூன். 08–
திருவான்மியூர் முதல் உத்தண்டி வரையில் ரூ.2,100 கோடி மதிப்பிலான நான்கு வழி மேம்பாலச் சாலைத் திட்டத்தை தமிழக அரசு ரத்து செய்ய முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சட்டசபை தேர்தலுக்கு 2 மாதங்களுக்கு முன்பு, கிழக்கு கடற்கரைச் சாலையில் திருவான்மியூர் முதல் உத்தண்டி வரையிலான 13.3 கி.மீ தொலைவிற்கு ரூ.2,100 கோடி மதிப்பிலான நான்கு வழி மேம்பாலச் சாலைத் திட்டத்திற்கான டெண்டர் அவசர அவசரமாக விடப்பட்டுள்ளது. இதில், முறைகேடுகள் நடந்துள்ளதாகவும், திட்டச் செலவு அளவுக்கு அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளதாகவும் புகார்கள் எழுந்தன.



அதாவது, இந்த 4 வழி மேம்பால சாலைத் திட்டத்தின் சராசரி கட்டுமானச் செலவு ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.157.89 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளையில், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மதுரவாயல் – சென்னை வெளிவட்டச் சாலைத் திட்டத்தில் முன்மொழிந்துள்ள ஆறு வழி மேம்பாலச் சாலையின் சராசரிச் செலவே ஒரு கிலோமீட்டருக்கு ரூ.147 கோடியாகும்.

எனவே, திமுக ஆட்சியில் அவசர அவசரமாக திட்டமிடப்பட்டு, டெண்டர் விடப்பட்ட ரூ.2,100 கோடி மதிப்பிலான இந்த மேம்பாலச் சாலத் திட்டத்தை ரத்து செய்வது தொடர்பாக தமிழக அரசு பரிசீலனை செய்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து நெடுஞ்சாலைத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், 'கடந்த 6 மாதங்களில் வழங்கப்பட்ட பெரும்பாலான திட்டங்களின் டெண்டர் நடைமுறைகள் தற்போது மறுபரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. திருவான்மியூர் – உத்தண்டி திட்டத்தின் செலவு மிக அதிகமாக இருப்பதாகக் கருதப்படுகிறது. இந்தத் திட்டத்திலும் மற்றும் சில திட்டங்களிலும் ஒப்பந்தம் வழங்கப்பட்ட முறையில் சில முறைகேடுகள் கண்டறியப்பட்டுள்ளன. அப்படியே திருவான்மியூர் திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு முன்வந்தாலும், முந்தைய திமுக அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் தொடர வாய்ப்பில்லை என்று தெரிகிறது,' என்றார்.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் டெண்டர்கள் கோரப்பட்டதில் இருந்தே இத்திட்டம் சர்ச்சையில் சிக்கியுள்ளது. கடந்த டிசம்பர் மாதம், போபாலைச் சேர்ந்த பில்ட்கான் என்ற உள்கட்டமைப்பு நிறுவனம், நிதி மதிப்பீட்டின் போது இறுதித் தேர்வான நிறுவனத்தை விட தாங்கள் சுமார் ரூ.500 கோடி குறைவாகக் குறிப்பிட்டிருந்தும் தங்களது டெண்டர் நிராகரிக்கப்பட்டதாகக் கூறி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தது.

இதனை ஏற்ற உயர்நீதிமன்றம், பில்ட்கான் நிறுவனத்தின் கோரிக்கையை அரசிடம் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டது. மேலும், இந்த மனுவைப் பெற்ற 10 நாட்களுக்குள் தமிழக நெடுஞ்சாலைக் கழகம் இறுதி முடிவை எடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியது.

இருப்பினும், பில்ட்கான் நிறுவனம் நீதிமன்றம் விதித்த காலக்கெடுவிற்குள் தனது கோரிக்கையைச் சமர்ப்பிக்கத் தவறியதாகக் கூறி, ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரருக்குப் பணி ஆணை வழங்கப்பட்டது.

# 5 தொகுதி இடைத்தேர்தல்; தேர்தல் கமிஷன் சுறுசுறு!

சென்னை, ஜூன். 08–
திருச்சி கிழக்கு உட்பட ஐந்து சட்டசபை தொகுதிகளில், இடைத்தேர்தல் நடத்துவதற்கான முன்னேற்பாடுகளில், தேர்தல் கமிஷன் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

சட்டசபை தேர்தலில், அ.தி.மு.க., சார்பில், மதுராந்தகம் தொகுதியில் போட்டியிட்ட மரகதம் குமரவேல்; பெருந்துறையில் போட்டியிட்ட ஜெயகுமார்; தாராபுரத்தில் களமிறங்கிய சத்யபாமா; அம்பாசமுத்திரம் தொகுதியில் போட்டியிட்ட இசக்கி சுப்பையா ஆகியோர் வெற்றி பெற்றனர்.

இவர்கள் பதவியேற்பு முடிந்த பின், தங்களின் எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமா செய்து, விஜயின் தமிழக வெற்றிக் கழகம் கட்சியில் இணைந்தனர். இதனால், நான்கு சட்டசபை தொகுதிகள் காலியாக உள்ளன. முதல்வர் விஜய், திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமா செய்ததால், அந்த தொகுதியும் காலியாக உள்ளது.

காலியாக உள்ள இந்த ஐந்து சட்டசபை தொகுதிகளுக்கும், ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்த வேண்டும். எனவே, அதற்கான முன்னேற்பாடுகளை, தேர்தல் கமிஷன் தொடங்கி உள்ளது.



இதுதொடர்பாக, டில்லியில் உள்ள தேர்தல் கமிஷனர்களுடன் ஆலோசனை நடத்த, இந்த வாரம் தமிழக தேர்தல் அதிகாரிகள், டில்லி செல்ல உள்ளனர். ஜூலையில் இடைத்தேர்தல் அறிவிப்பு வெளியாகலாம் என, தேர்தல் கமிஷன் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சட்டசபை தேர்தல் முடிந்து, ஓராண்டுக்குள் ஐந்து தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடப்பது, தமிழகத்தில் இதுவே முதல் முறை என்பதால், அரசியல் வட்டாரம் சூடுபிடிக்க தொடங்கி உள்ளது.

சட்டசபையில், தனிப்பெரும்பான்மையை பெற வேண்டும் என்பதால், த.வெ.க., தலைமை, இத்தேர்தலில் வெற்றி பெற இப்போதே வியூகங்களை வகுத்து வருகிறது. ஐந்து தொகுதிகளிலும், மக்கள் பிரச்னைகளை தீர்க்க முக்கியத்துவம் அளிக்கும்படி, அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

# பள்ளிகளை எந்நேரமும் ஆய்வு செய்ய வருவேன்; அமைச்சர் ராஜ்மோகன்!

மதுரை, ஜூன். 08–
பள்ளிகளை எந்நேரமும் ஆய்வு செய்ய வருவேன். ஆசிரியர்கள் தயாராக இருக்க வேண்டும்'' என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.

மதுரை விமான நிலையத்தில் அவர் கூறியதாவது: அமைச்சர் என்பதைவிட ஒரு சகோதரனாக தமிழகத்தின் எந்த பள்ளிக்கும், எப்போது வேண்டுமானாலும் நான் முன்னறிவிப்பின்றி வருவேன் என்பதை சுட்டிக்காட்டுகிறேன். இதை எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டாம். பொறுப்புணர்வாக அதிகாரிகளும், ஆசிரியர்களும் எடுத்துக் கொள்ள வேண்டும். நான் வருவது சம்பிரதாயத்திற்கானதாக இருக்காது. எனவே தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கூட்டுப் பொறுப்பு.



அரசு பள்ளிகளில் வழங்கிய நோட்டு புத்தகப் பைகள் சாலைகளில் வீசப்பட்டுள்ளது சம்பந்தமாக உடனே அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டேன். அந்த குறிப்பிட்ட பள்ளியில் அந்தக் குழந்தைகளுக்கு பேன்சியான பை வாங்கி கொடுத்து இருக்கின்றனர். அம்மாணவர்கள் பள்ளியில் கொடுத்த பொருட்களை வைத்துக்கொண்டு, அரசு பேக்கை தூக்கி எறிந்துள்ளனர். இதை சிலர் வீடியோ எடுத்திருக்கின்றனர். சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர் அந்தப்பையை எடுத்து வைத்திருக்கிறார்.

தி.மு.க., தயவில்தான் த.வெ.க., ஆட்சி நடக்கிறது. மூன்று மாதங்களில் ஆட்சி கலைக்கப்படும் என முன்னாள் முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார். ஒரு மூத்த அரசியல் தலைவர் அப்படி கூறியிருக்க வேண்டாம். எங்களை பொறுத்தவரை கூட்டணியில் இருப்பவர்களுக்கு ஏற்கனவே சொன்னபடி முதல்வர் விஜய், அமைச்சரவையில் இடம் கொடுத்திருக்கிறார்.

வன்னியரசுக்கு அமைச்சரவையில் இடம் கிடைத்திருப்பது தனிப்பட்ட மனிதருக்கானது அல்ல. நீண்ட காலமாக ஒதுக்கப்பட்ட மக்களுக்கான அங்கீகாரம். இந்தியன் யூனியன் முஸ்லிம்லீக் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக அமைச்சரவையில் இடம் பெற்றிருப்பது குரலற்றவர்களுக்கு குரலாக இருப்பதற்கான அடையாளம்.

கூட்டணி என்ற பெயரில் அவர்கள் முதுகில் ஏறி சவாரி செய்து ஓட்டுகளை வாங்கிவிட்டு, அவர்களுக்கு அங்கீகாரத்தை தராமல் இருந்தனர். முதல் முறையாக தமிழக அரசியலில் முதல்வர் விஜய் அதை நிறைவேற்றியுள்ளார். நீட் தேர்வு ரத்து மசோதா உள்பட பல்வேறு தீர்மானங்கள் சட்டசபையில் நிறைவேற்ற ஆலோசனை நடக்கிறது. இவ்வாறு ராஜ்மோகன் கூறினார்.

# அமீர்கான் 3-வது திருமணம்?



பாலிவுட் நடிகர் Aamir Khan தனது நீண்டகால தோழியான Gauri Spratt–ஐ ஜூலை 5, 2026 அன்று திருமணம் செய்ய இருப்பதாக உறுதி செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது அமீர்கானின் மூன்றாவது திருமணமாக இருக்கும். இருவரும் கடந்த இரண்டு ஆண்டுகளாக உறவில் இருந்து வந்த நிலையில், தற்போது திருமணம் செய்ய முடிவு செய்துள்ளனர். இந்த தகவல் ரசிகர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், சமூக வலைதளங்களிலும் அதிகம் பேசப்பட்டு வருகிறது.

# திறப்பு விழா கண்டு 4 மாதமே ஆன ஒட்டன்சத்திரம் நகராட்சி தென்றல் நகர் பூங்கா புதர் மண்டி கிடக்கும் அவலம்; கண்டுகொள்ளாத நகராட்சி நிர்வாகம்!

ஒட்டன்சத்திரம், ஜூன். 08–
திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சி 10–வது வார்டு தென்றல் நகர் பகுதியில் பூங்கா அமைக்கும் பணி ரூபாய் 1.6 கோடியே மதிப்பீட்டில் கட்டப்பட்டு நடப்பாண்டு ஜனவரி மாதம் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளி காட்சி வாயிலாக திறக்கப்பட்டது.

திறக்கப்பட்ட நான்கு மாதங்களிலேயே எந்த ஒரு பராமரிப்பும் நகராட்சி நிர்வாகத்தின் சார்பாக நடைபெறாத நிலையில் இந்த பூங்கா புதர் மண்டி கிடப்பது பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இப்பகுதி நகர்ப்புறம் என்பதால் பூங்காவில் சுற்றியுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளது குடியிருப்பு பகுதியில் உள்ள பொதுமக்களின் நடைபயிற்சிக்கு இந்த பூங்கா மட்டுமே உள்ளதால் பூங்காவில் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் அதிகமானோர் நடைப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். பூங்காவின் பெரும்பகுதி பொற்களாலும் புதர்களாலும் மூழ்கி கிடப்பதால் நடைபாதை மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள் எதுவுமே மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. அதனால் நடைப்பயிற்சிக்கு வந்த பொதுமக்கள் ஆங்காங்கே அமர்ந்து விட்டு செல்வது பொது மக்களுக்கு ஏமாற்றத்தை தருகிறது.




அதுமட்டுமின்றி இரவு நேரங்களில் பூங்காவிற்குள் குடிமகன்கள் உள்ளே சென்று மது அருந்தி ஆங்காங்கே பாட்டில்கள் வீசப்பட்டும் கிடப்பதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அப்பகுதியில் இருக்கும் 10–வது வார்டு கவுன்சிலரிடம் பலமுறை பொதுமக்கள் இது சம்பந்தமாக புகார் அளித்தும் இன்று வரை எவ்வித நடவடிக்கையும் இல்லை என்றும் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். புதர் மண்டி கிடக்கும் இப்பகுதியில் அதிகமான விஷப்பூச்சிகள் நடமாடுவதாகவும் இதை உடனடியாக சுத்தம் செய்து பொதுமக்களுக்கு பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையிலும், பயன்படும் வகையில் சுத்தம் செய்து தரும்படி மாவட்ட நிர்வாகத்திற்கு ஒட்டன்சத்திரம் நகராட்சி நிர்வாகத்திற்கும் பொது மக்களும் சமூக ஆர்வலரும் கோரிக்கை வைக்கின்றனர்.

# பொறுப்பு அமைச்சர்கள்; முதல்வர் விஜய் புது பார்முலா!

சென்னை, ஜூன். 08–
தி.மு.க., – அ.தி.மு.க. பாணியில் த.வெ.க.வும் மாவட்ட வாரியாகப் பொறுப்பு அமைச்சர்களை நியமித்துத் தமிழக அரசியல் களத்தைச் சூடாக்கியுள்ளது. யாரும் எதிர்பாராத திருப்பமாக, நீலகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சராகஅவிநாசி எம்.எல்.ஏ.வும், அமைச்சருமான கமலி நியமிக்கப்பட்டுள்ளார். அதேசமயம் திருப்பூர் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சராக நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த அமைச்சர் அருண்ராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். இவர்களுக்கான சவால்கள் என்ன?



அருண்ராஜ்



கமலி



**அமைச்சர் அருண்ராஜ்க்கு சவாலான பொறுப்பு**

திருப்பூர் மாவட்டத் தொழில்முனைவோர் மற்றும் விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு அமைச்சர் அருண்ராஜ் விரைந்து தீர்வு காண வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். கோடிக்கணக்கில் அன்னியச்செலாவணியை ஈட்டினாலும், திருப்பூரின் மோசமான சாலைகள், போக்குவரத்து நெருக்கடி, குப்பைகள் மற்றும் ஆமைவேக அரசு இயந்திரம் போன்ற உட்கட்டமைப்பு குறைபாடுகளை நவீனமயமாக்குவது இவரது கடமையாக உள்ளது.

அரசியல் ரீதியாக தி.மு.க., – அ.தி.மு.க., – பா.ஜ., – கம்யூனிஸ்ட் கட்சிகள் வலுவாக உள்ள திருப்பூர் மாவட்டத்தின் நான்கு முனை களத்தில், த.வெ.க.,வுக்கு ஆதரவு அலையை உருவாக்குவது இவருக்குப் பெரும் சவாலாகும். மேலும், உள்ளூர் அமைச்சரையே நியமிக்கும் பாரம்பரிய விதியை மாற்றி, நாமக்கல்லைச் சேர்ந்த அருண்ராஜ் நியமிக்கப்பட்டுள்ளதால் அவரைத் தொடர்பு கொள்வதில் நடைமுறைச் சிக்கல்இருப்பதாக முணுமுணுப்பு எழுந்துள்ளது. கோரிக்கைகளை எளிதாகக் கொண்டு செல்ல திருப்பூரில் தனி அலுவலகம் அமைக்க வேண்டும் என உள்ளூர் அமைப்புகள் எதிர்பார்க்கின்றன.

**அமைச்சர் கமலிக்கு விஜய் தந்த ஆச்சர்யம்**

கொங்கு மண்டலத்தை மூத்த தலைவர் செங்கோட்டையன் கவனித்து வந்த நிலையில், நீலகிரிக்கு கமலி நியமிக்கப்பட்டது அரசியல் வட்டாரத்தில் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை தி.மு.க., – காங்கிரஸ் கோட்டையாக இருந்த நீலகிரியின் மலைப்பகுதிகளில் சட்டசபை தேர்தலில் த.வெ.க., வெல்லாவிட்டாலும் சமவெளித் தொகுதி களில் வென்றது. எனவே, வரும் தேர்தலில் மலைப்பகுதியிலும் கட்சியின் செல்வாக்கை உயர்த்த வேண்டிய சவால் கமலிக்கு உள்ளது.

சமவெளிப் பகுதிகளில் வெற்றியைத் தீர்மானிக்கும் அருந்ததியர் சமூக மக்களின் ஓட்டு வங்கியைத் த.வெ.க. குறிவைத்துள்ளது; அவிநாசி தொகுதியிலிருந்து இதுவரை யாரும் அமைச்சரானதில்லை என்ற வரலாற்றைக் கமலி உடைத்துள்ளதால் இதன் தாக்கம் அன்னூர், மேட்டுப்பாளையம் பகுதிகளில் எதிரொலிக்கும்.

சமூக சமன்பாட்டின்படி இவருக்குப் பொறுப்பு வழங்கப்பட்டாலும், நீலகிரியின் அனுமதியற்ற கட்டட விவகாரம், சிதைந்த உட்கட்டமைப்பு போன்ற அரசு நிர்வாகப் பிரச்னைகளையும் சரி செய்ய வேண்டிய பொறுப்பு இவருக்கு உண்டு.

# எழுத்தாளர் கோ.ஏகாம்பரம் பாராட்டு விழா!

பன்முகப் பேராற்றல் மிக்க இனியவர், எழுத்தாளர், சிந்தனையாளர், சிறந்த வாசிப்பாளர் தமிழ்நாடு அரசு தீயணைப்புத் துறை உயர் அலுவலர் பணியாற்றி அண்மையில் பணி நிறைவு பெற்ற கோ. ஏகாம்பரம் பாராட்டு விழாவில் மதுரை காளவாசல் தங்கம் கிராண்ட் ஹோட்டல் மாநாட்டு அரங்கத்தில் 07.06.2026. ல் இரவு நடைபெற்ற இனிய நிகழ்வு.



இலக்கிய நண்பர்கள், எழுத்தாளர்கள், அரசுப் பணியாளர்கள், சின்னத் திரை பெரிய திரை நட்சத்திரங்கள், கவிஞர்கள் எனப் பண்பட்ட பெருமக்களின் வாழ்த்து மழை. மதுரை உலா நற்பணி மன்ற நிறுவனர் மற்றும் தலைவர் ரெ. கார்த்திகேயன் தலைமையில் மதுரை மேனேஜ்மெண்ட் அசோசியேசன் பொறியாளர் சண்முகசுந்தரம் நெறிப்படுத்தி நடத்திய விழாவில் கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத் தலைவர் மனிதத்தேனீ ரா. சொக்கலிங்கம் பண்பட்ட பேருள்ளம் என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றுகையில் தான் அரசுப் பணியில் மிகப் பெரிய பொறுப்பில் இருந்தாலும் எங்கும் எப்போதும் இயல்பாக இருக்கும் எளிய நண்பர்.

பல்வேறுபட்ட மனிதர்கள் பேரன்பைப் பெற்று மாநகர் மதுரைக்கு ஒரு புதிய முகமாக கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பயணப்படும் பண்பாளர். யாரிடமும் முரண்படாமல் நேர்த்தியாக வாழும் கலை ஏகாம்பரத்தின் தனித் தன்மை. ஏராளமான நண்பர்களை நமது கார்த்திக் மூலம் பெற்றிருப்பதும் அதனை மிகச் சரியாகப் பயன்படுத்தி அவர்களுக்கும் முன்மாதிரியாகத் திகழ்வது கூடுதல் சிறப்பு. அன்னைத் தமிழுக்கு அயராது உரம் சேர்த்திடும் உள்ளம் இவர். மிகுந்த பேரன்புடன் உள்ளன்புடன் பழகும் தன்மை இவரது பலம் என்றார்.

முன்னதாக தியாக தீபம் அ. பாலு, கவிஞர் கோ, வானொலி சதீஷ், மணியம்மை பள்ளி வரதராஜன், திரைப்படக் கலைஞர் ஜெ. விக்டர், நல்லாசிரியர் ஜான் பெலிக்ஸ் கென்னடி, வே. சுவாமிநாதன், த. பரந்தாமன், வீ. ஆதிசிவத் தென்னவன், வீ. காளீஸ்வரன், பொன் பாண்டி, கவிஞர் இரா. இரவி, மீ. ராமசுப்பிரமணியன், சு. பாலகிருஷ்ணன், குடந்தை ரகுநாதன், பி.தங்கமணி, அசோக்குமார், செந்தில்குமார், நஜ்முதீன், எஸ்டி. சுப்பிரமணியன், மூத்த பத்திரிகையாளர் ஆர். கணேசன் , ரப்பர் ஸ்டாம்ப் ராமன், கலாம் சுப்பிரமணியன், மணிகண்டன், ராஜசேகர் உள்ளிட்ட பலர் மின்னல் வேகத்தில் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழால் இணைந்து தொடர்ந்து நம் செம்மொழிக்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில் இந்த விழா நமது மதுரையில் நடைபெற்றது எல்லா வகையிலும் சிறப்பு.

வாழிய நண்பர் ஏகாம்பரம் இதனை முன்னெடுத்த மதுரை உலா நற்பணி மன்றத் தலைவர் ரெ. கார்த்திகேயன் பணி மேலும் சிறக்கட்டும்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020